செ.வெ.எண்.44 நாள்.18.04.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009ன்படி 2017–18ம் கல்வியாண்டில் தனியார் சுயநிதி பள்ளிகளில் 25 சதவித இட ஒதுக்கீடு சேர்க்கை தொடர்பாக பள்ளி முதல்வர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

–––––––

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் பள்ளிக் கல்வித் துறையின் மூலம் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009ன்படி 2017–18ம் கல்வியாண்டில் தனியார் சுயநிதி பள்ளிகளில் 25 சதவித இட ஒதுக்கீடு சேர்க்கை தொடர்பாக பள்ளி முதல்வர்கள்/ தலைமை ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.04.2017) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009ன்படி, 2017–18ம் கல்வியாண்டில் மெட்ரிக் பள்ளிகள், மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகள், மழலையர் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் உள்ளிட்ட தனியார் சுயநிதி பள்ளிகளில் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகள் கல்விப்பயில 25 சதவித இடஒதுக்கீட்டினை முழுமையாக எய்திட வேண்டும். இந்த கல்வியாண்டில் 166 மெட்ரிக் பள்ளிகள், மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 294 மழலையர், தொடக்கப்பள்ளிகளில் மொத்தம் 5469 இடங்கள் நிரப்பப்பட வேண்டும். 2014–15ம் கல்வி ஆண்டில் 5190 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, ரூ.3,55,43,309/– தொகை பெறப்பட்டு, பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2015–16ம் கல்வி ஆண்டிற்கான தொகை இன்னும் ஒரு வார காலத்திற்குள் சம்மந்தப்பட்ட பள்ளி முதல்வர்களுக்கு ECS மூலம் வழங்கப்படவுள்ளது. மாணவ, மாணவியர்களுக்கான சேர்க்கை கட்டணத்தை அரசு உங்களுக்கு வழங்குகிறது. எனவே, நீங்கள் இலவசமாக சேர்க்கை வழங்குவதாக கருதக்கூடாது.

2017–18ம் கல்வியாண்டில் இச்சேர்க்கை இணையதளம் வழியாக நடைபெற உள்ளது. இதற்கான இணையதள வசதிகள் மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், திருநெல்வேலி மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலகம், திருநெல்வேலி மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம், திருநெல்வேலி/தென்காசி/சேரன்மகாதேவி ஆகிய மாவட்ட கல்வி அலுவலகங்கள், அனைவருக்கும் கல்வி இயக்ககம் அனைத்து வட்டார வளமையம், அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம், மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு சேவை மையம், திருநெல்வேலி அனைவருக்கும் கல்வி இயக்கம் முதன்மை கல்வி அலுவலகம், திருநெல்வேலி அனைவரும் இடைநிலைக்கல்வி இயக்கம் முதன்மை கல்வி அலுவலகம் ஆகிய மையங்களில் விண்ணப்படிவத்தினை பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த விவரங்களையும், உங்கள் பள்ளியில் உள்ள இட ஒதுக்கீடு விவரங்களையும் பள்ளியில் தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விளம்பரப்படுத்திட வேண்டும். பள்ளியில் விண்ணப்பங்கள் கேட்டு பெற்றோர்கள் வந்தால் எக்காரணம் கொண்டும் நிராகரிக்கவோ, திருப்பியனுப்பவோ கூடாது. விண்ணப்பத்தினை சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்/ முதல்வர்களே இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். பதிவேற்றம் செய்ய வசதி இல்லாதவர்கள் அருகிலுள்ள அரசு கல்வி அலுவலங்களில் கொடுத்து பதிவேற்றம் செய்யலாம்.

இச்சேர்க்கைக்கு 20.04.2017 முதல் 18.05.2017 தேதி வரை விண்ணப்பிக்கலாம். தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப எண்ணுடன் பள்ளித் தகவல் பலகையில் 22.05.2017 அன்று தேர்வு செய்யப்பட்டவர்கள் விவரம் தெரிவிக்க வேண்டும். நிராகரிக்கப்பட்டவர்களின் விவரங்கள் காரணத்துடன் வெளியிடப்பட வேண்டும். அதிக விண்ணப்பங்கள் பெறப்பட்டால் அரசாணை எண்.66ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி குலுக்கல் முறையில் நடத்திட வேண்டும். தேர்வு செய்யப்பட்ட குழந்தைகள் 29.05.2017க்குள் சம்மந்தப்பட்ட பள்ளியில் சேர்க்கை செய்யப்பட வேண்டும். அவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் ஏதும் பெறக்கூடாது. இச்சேர்க்கை கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படியான சேர்க்கைகளில் புகார்கள் ஏதும் இல்லாத வகையில் அனைத்து பள்ளிகளும் திறம்பட, இத்திட்டத்தினை செயல்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இரா.சுவாமிநாதன், மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆய்வாளர் திருமதி.பாலா, சேரன்மகாதேவி மாவட்ட கல்வி அலுவலர் திரு.ஜெயராஜ் மற்றும் பள்ளி முதல்வர்கள்/ தலைமை ஆசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.